செ.வெ.எண்: 220 நாள்:02.04.2018

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தமிழக அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் 29 பயனாளிகளுக்கு ரூ.8.57 லட்சம் மதிப்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (02.04.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், பாளையங்கோட்டை வட்டம் சிவந்திப்பட்டி கிராமத்தை சேர்நத 25 பயனாளிகளுக்கு தலா ரூ.32,400 மதிப்பில் மொத்தம் ரூ.8.10 லட்சம் மதிப்பிலான இலவச வீட்டுமனை பட்டாக்களையும், தட்கோ மூலம் 3 பயனாளிகளுக்கு தலா ரூ.8846 மதிப்பிலான தையல் இயந்திரம் மொத்தம் ரூ.26,538 மதிப்பிலும், தாட்கோ மூலம் மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி ரூ.20 மதிப்பில் ஆட்டோ மெக்கனிக் தொழில் நிதியுதவி ஒரு பயனாளிகளுக்கு என மொத்தம் 29 பயனாளிகளுக்கு ரூ.8,56,538 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தனிப்பிரிவு மூலம் மனுக்கள்,மாவட்ட ஆட்சித்தலைவர் மக்கள்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெற பட்ட மனுக்கள ஆகியவற்றில் நிலுவை உள்ள மனுக்கள் குறித்து ஆய்வு மேற்க்கொண்டார். அனைத்து மனுக்களின் மீதும் உடன் நடவடிக்கை மேற்க்கொள்ள உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, கலால் உதவி ஆணையர் திரு.பழனிகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.விஜயகுமார், துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி.லெட்சுமி பிரியா, பாளையங்கோட்டை வட்டாச்சியர் திரு.கந்தசாமி, உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.